ஆண்டு சந்தா ரூ. 60/–

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 5 இதழ் : 2 டிசம்பர் 2008



**நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்;
நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்.**

*ஏசாயா 9:6*

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்

## உங்கள் சகோதரனிடமிருந்து....



சமாதானபிரபுவாம் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள்!

தேவன் தாமே இவ்வருடத்தின் கடைசி மாதமான டிசம்பர் மாதத்தைக் காணும்படியாக செய்த கிருபைக்காக அவரைத் துதிப்போம். மட்டுமின்றி அனைவருக்கும் மிக்க மகிழ்ச்சியின் மாதமாக தேவன் தந்தபடியால் தேவனைத் துதிப்போம். நவம்பர் மாதத்தில் தேவன் நம் ஷாலோம் சுதேச ஊழியர்களின் குடும்ப முகாமை அபரிமிதமாய் ஆசீர்வதித்தார். 435 சுதேச ஊழியர்களும் குடும்பமாக மெகம்தாபாத்தில் நவம்பர் 4ம் தேதி முதல் 7ம் தேதி வரை கூடி வந்து ஆராதிக்க, ஜெபிக்க, தேவனுடைய வார்த்தையைக் கேட்க, அபிஷேகத்தில் நிரம்ப, புதிய தரிசனங்களைக் காண, பீல் மக்களின் இரட்சிப்பின் திட்டத்தில் முழுமையாக தங்களை அர்ப்பணிக்க பரிசுத்த ஆவியானவர் மிக நெருக்கமாக செயல்பட்டார். சகோ. மோகன் சி. லாசரஸ் (இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி) அவர்கள் குழுவாக வந்து செய்திகளை அளித்து ஊழியர்களை உற்சாகப்படுத்தி பலப்படுத்தினார்கள். விபரங்களை உள்ளே வாசித்து தேவனைத் துதியுங்கள். இம் முகாமிற்காக கருத்துடன் ஜெபித்த, தாங்கிய அனைவருக்கும் என் அன்பான வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். தேவன் தாமே உங்களை பல மடங்காக ஆசீர்வதிப்பாராக! மேலும் நவம்பர் மாத்தில் 30 புதிய சுதேச ஊழியர்களுக்கு 1 மாத பயிற்சி நடைபெற்று வருகிறது. வாலிபர் முகாம், 20 சபைகளின் பெண்கள் முகாம் மேலும் ஷாலோம் ஊழிய தலைவர்கள் கூடுகை, B.Th. பயிற்சி முகாம்கள் ஆகியன சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார். நவம்பர் 16 & 23 தேதிகளில் அனைத்து ஷாலோம் சபைகளிலும் "அறுப்பின் பண்டிகை" நடைபெற தேவன் கிருபை தந்தார். தேவனுக்கே மகிமை!

கிறிஸ்துமஸ் மனமகிழ்ச்சியான பண்டிகை நாட்களில் அனைத்து பீல் மக்கள் சபையில் விசுவாசிகள் யாவரும் குறைந்தது ஆளுக்கு ஒரு குடும்பத்திற்காவது கிறிஸ்துவின் பிறப்பின் நற்செய்தியை அறிவிக்க ஜெபத்துடன் தீர்மானித்துள்ளனர். நாமும் நம் ஊழியர்களை ஜெபித்து உற்சாகப்படுத்துவோம். இவ்வருடமும் சுதேச ஊழியர்கள் குடும்பங்களுக்கு புத்தாடைகளும், ஆதிவாசி சிறுவர்களுக்கு வெகுமதிகளும் வழங்க சுமார் ரூ. 6,00,000/– (ஆறு லட்சம்) தேவைப்படுகிறது. உற்சாகத்துடன் உங்ககள் பங்கை அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிறேன். மேலும் பண்டிகை நாட்களில் எவ்வித எதிர்ப்புகளோ, துன்பங்களோ சபைக்கு நேரிடாதபடிக்கு ஜெபியுங்கள்.

தேவன் தாமே உங்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக!

**இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். மத். 1:23**

*தேவ அறுவடைபணியில் உங்கள் அன்பு சகோதரன்*

*(வே. தேவதாஸ்)*

***"Wish you all a Happy Joyful Christmas"***

# முதல் கிறிஸ்துமஸ்

சிறப்புச் செய்தி : **சகோ. V. தேவதாஸ்**

சமாதான பிரபுவாம் இயேசு கிறிஸ்து பிறந்த நாளை நினைத்து மகிழ்ந்து உலகமெல்லாம் கொண்டாடும் மாதம் இது. டிசம்பர் மாதம் வந்துவிட்டால் உடனே ஞாபகம் வருவது நட்சத்திரம் (Star), வண்ணமிகு விளக்குகள், வீடுகளை சுத்தப்படுத்தி அலங்கரித்தல், கிறிஸ்துமஸ் கேக், புத்தாடைகள், கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை அனுப்புதல், குடும்ப அங்கத்தினர்கள் யாவரும் ஒன்றாக சேர்தல் & சந்தித்தல், அறுசுவையான பிரியாணி மற்றும் இனிப்புகள், உணவுகள் தயாரித்தல் அவைகளை மற்றவர்களுக்குக் கொடுத்தல், கிறிஸ்துமஸ் பவனி கீதங்கள் வருகை, கிறிஸ்துமஸ் தாத்தாவின் ஆடல் & பாடல், சிறு பிள்ளைகளுக்கான வெகுமதிகள், விடியற்கால ஆராதனை, வாண வேடிக்கைகள், ஏழை எளியவர்களுக்கு உதவுதல், இன்னும் எத்தனையோ சொல்–க்கொண்டே போகலாம். ஆனால் வேதத்தை தியானிக்கும் போது முதல் கிறிஸ்துமஸ் கொண்டாடிய போது இயேசு பாலகனுடன் இணைந்த பாத்திரங்களை நினைப்பது நலமாக இருக்கிறது சற்று தியானிப்போம்.

**நீதிமானாகிய யோசேப்பு**

இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் நிமித்தமாக தேவன் பயன்படுத்திய பாத்திரங்களில் மிக முக்கியமான நபர் யோசேப்பு. இவரை குறித்து வேதம் சொல்லுகிறது "அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானியருந்து...." அன்பானவர்களே! தனக்கு நியமிக்கப்பட்ட மரியாள் கர்ப்பவதியானாள் என்று அறிந்த போது மோசேயின் பிரமாணத்தின்படி கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்று நினைக்கவில்லை. இரண்டாவது அவளை தள்ளிவிட யோசனை செய்யும் போது தேவதூதன் செய்தியை அறிவித்த போது தேவனுக்கு முத–டம் கொடுத்து மறுகேள்வி கேட்காமல் தேவசித்தத்தை ஏற்றுக்கொண்டான். மூன்றாவதாக மத். 1 : 24, 25 ல் வாசிக்கிறோம். தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே தன்

மனைவியைச் சேர்த்துக் கொண்டு அவள் முதற்பேரான குமாரனை பெறுமளவும் அவளை அறியாதிருந்து அதாவது தன் மனைவியின் கர்ப்பத்தில் தேவகுமாரன் பிறக்க போவதை தெய்வ பயத்துடன் ஏற்று அவளை நேசிக்க மறவாமல், அவளை நன்றாக உரிய முறையில் பராமரித்தான். தேவன் யோசேப்பை ஆசீர்வதித்தார். இயேசுவுக்கு பின் நல்ல பிள்ளைகளையும் தேவன் தந்து ஆசீர்வதித்தார். (மாற்கு 6:3) இன்றும் தேவன் யோசேப்பை போல நீதிமான்களைத் தேடுகிறார். நம் வாழ்வில் யோசேப்பைப் போல சுபாவங்கள் காணப்படுகிறதா? ஆரய்ந்து பார்ப்போம்.

**அடிமையாய் தன்னை தாழ்த்திய மரியாள்**

இயேசு பாலகனை சுமந்த மாபெரும் பாக்கியத்தைப் பெற்றவள் மரியாள். இன்று உலகமே வாழ்த்தும் கனமுள்ள பாத்திரமாக இருக்கிறாள். ஆனால் சற்று நினைத்து பாருங்கள். கன்னியான அவள் கர்ப்பவதியாக வேண்டும் என்று தேவதூதன் காபிரியேல் கூறும் போது உலகம் என்னை என்ன நினைக்கும்? தூஷிக்கப்படுவேனே! ஐயோ என் வருங்கால கணவர் என்ன நினைப்பார்? இது ஒரு வேதனை எனக்கு வேண்டாம் என்று சொல்லவில்லை. கிறிஸ்து என்னில் பிறக்க என்ன நிந்தை வந்தாலும் சுமக்க ஆயத்தம் என்று தன்னை தேவதூதனிடம் "இதோ நான் ஆண்டவருக்கு அடிமை; உம்முடைய வார்த்தையின்படியே ஆகக்கடவது" என்றாள். (லூக்கா 1 : 38) நான் என்று சொல்ல ஒன்றுமே இல்லாதபடி தன்னையே வெறுத்து, தாழ்த்தி ஒப்புக்கொடுத்த மரியாளைப்போல் நம்மை ஒப்புக்கொடுத்துள்ளோமா? கிறிஸ்து நம்மில் உருவாகி உலகிற்கு வெளிப்பட அவருக்காக எல்லாவற்றையும் சகித்திருக்கிறோமா?

**தேவனை சந்தித்த தேவதூதர்கள்**

"இயேசுவின் பிறப்பு" என்றாலே நற்செய்தி அந்த நற்செய்தி விண்ணுலகத்திற்கு மட்டுமல்ல மண்ணுலகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும் அதை வெளிப்படுத்த பரலோக தூதன் வெளிப்பட்டான். மேய்ப்பர்களுக்கும் எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை அறிவித்தான். அந்த செய்தி

கிறிஸ்தவர்களாகிய நமக்கு மட்டுமல்ல "எல்லா ஜாதிகளுக்கும்" என்று கூறினான். மட்டுமல்லாமல் தேவதூதர்கள் பரமசேனை திரளாக இறங்கி வந்து "உன்னதத்தி–ருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக!" என்று துதித்தார்கள். பூமியில் எல்லா ஜனங்களுக்கும் நற்செய்தி மூலமாக சமாதானம் உண்டாக வேண்டும் என்று நாம் எண்ணுகிறோமா? இந்த நற்செய்தி; பாலகனான இயேசுவுக்காக தேவனுக்கு மகிமை செலுத்துகிறோமா?

**பிரசித்தம் செய்த மேய்ப்பர்கள்**

பரலோக தூதர்கள் கொண்டுவந்த நற்செய்தியை ஏற்றுக் கொண்டு இயேசு பாலகனைக் கண்டு தரிசித்து அளவில்லா ஆனந்தமடைந்தார்கள். அதே வேளையில் தேவ தூதன் கொடுத்த நற்செய்தியில் இது எல்லா ஜனத்திற்கும் உண்டான நற்செய்தி என்பதை உணர்ந்தார்கள். ஆகவே அவர்கள் சென்ற இடமெல்லாம் இயேசுகிறிஸ்துவின் பிறப்பின் செய்தியை பிரசித்தம் செய்தார்கள். இவ்வருடம் நம் ஷாலோம் ஊழியத்தில் அனைத்து சபை விசுவாசிகளும் குறைந்தது ஒரு, கிறிஸ்துவை அறியாத குடும்பத்தையாவது தங்கள் இல்லத்திற்கு அழைத்துவந்து நல்ல விருந்து கொடுத்து கிறிஸ்துவின் பிறப்பின் செய்தியையும், தங்கள் சாட்சிகளையும் கூறி சபையில் நடைபெறும் கிறஸ்துமஸ் ஆராதனைக்கு அழைத்து வரவேண்டும் என்று தீர்மானித்து ஜெபித்து செயல்பட இருக்கிறார்கள். அதுபோலவே (Caral Rounds) "கீத பவனி" செல்லும் போது அந்தந்த கிராமத்தில் கிறிஸ்துவை அறியாத அக்கம் பக்கம் உள்ளவர்கள் வீட்டிற்குச் சென்று சமாதான வாழ்த்துக்களையும், ஆசீர்வாதங்களையும் கொடுக்க வேண்டும் எனவும் தீர்மானித்துள்ளனர். நாமும் மேய்ப்பர்களைப் போல் நம்மை சுற்றியுள்ள நண்பர்களுக்கு நற்செய்தி அறிவித்து சமாதான பிரபுவை பரிசாகக் கொடுக்கலாமே!

**வழியை ஆயத்தம் செய்ய பிறந்த யோவான்ஸ்நானகன்**

கிறிஸ்துவின் முதல் வருகையின் வழியை ஆயத்தம் செய்ய தேவன் தெரிந்து

கொண்ட பாத்திரமே யோவான்ஸ்நானகன். பாருங்கள் கர்ப்பத்தில் இருக்கும் போதே ஆவியில் நிறைந்து துள்ளியவன் அவன். அவன் பிறப்பினிமித்தம் அநேகர் சந்தோஷப்படுவார்கள் என்று (லூக்கா 1:14) சொல்–யபடி பல்லாயிரங்களுக்கு சமாதானப்பிரபுவை வழிகாட்டி அநேகருக்குச் சந்தோஷத்தைத் தரும் பாலகனாக விளங்கினான். இன்று நம் ஒவ்வொருவர் பிறப்பினிமித்தம் எத்தனை பேர் சந்தோஷப்படுகிறார்கள். நம் பிறப்பு பெற்றோருக்கும், உடன் பிறந்தவர்களுக்கும் சந்தோஷமாக உள்ளதா? இல்லையெனில் நம் நிமித்தம் துக்கப்படுகிறார்களா? என்று ஆராய்ந்து பார்ப்போம்.

**இரட்சண்யத்தைக் கண்ட சிமியோன்**

கிறிஸ்துவின் முதல் வருகைக்காக காத்திருந்தவனாக காணப்பட்டார். இயேசு கிறிஸ்துவை இஸ்ரவேலுக்கு மகிமையாக மட்டுமல்ல இயேசுவை புறஜாதிகளுக்கு பிரகாசிக்கிற ஒளியாகக் கண்டார். "தன் தலைமுறையில் மேசியா வருவார் அவரை நான் காண வேண்டும்" என்று விசுவாசித்தார். நாமும் கூட நம் தலைமுறையில் நம் தேசம் தேவனைக் காணவேண்டும், தேவன் நம் தேசத்திற்கு வைத்திருக்கும் இரட்சிப்பை நாம் காண வேண்டும் என விசுவாசிக்கிறோமா? சிமியோன் விசுவாசித்தபடியே மரிக்கும் முன்பாக கிறிஸ்து பாலகனை கையில் ஏந்தி "உம்முடைய இரட்சண்யத்தை என் கண்கள் கண்டது" தேவனைத் என்று துதித்தார்.

**எருசலேமிலே மீட்பு உண்டாக காத்திருந்த அன்னாள்**

(லூக். 1:36–38) கிறிஸ்துவின் முதல் வருகைக்காக எண்பத்தி நான்கு வயதான தாய் தேவாலயத்தை விட்டு நீங்காமல் இரவும் பகலும் உபவாசித்து ஜெபம் பண்ணி ஆராதனை செய்து கொண்டிருந்தாள் என்று வாசிக்கிறோம். இன்றும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பு நம் தேச மீட்பு உண்டாகும்படி தேவ பாதத்தில் உபவாசித்து ஜெபிக்கும் அன்னாள்களை தேவன் தேடுகிறார். தேவன் அன்னாளின் ஜெபத்தைக் கேட்டார். எருசலேமிற்கு மீட்பைக் கொடுத்தார்.

தான் மட்டுமல்ல எருசலேமின் மீட்புக்காக காத்திருந்த ஒரு கூட்ட மக்களுடன் இயேசுவைக் குறித்து பேசி துதித்தார்கள்.

**சந்தோஷத்தை உண்டாக்கி வழி நடத்திய நட்சத்திரம்**

கிறிஸ்துவின் முதல் வருகையை மிக அழகாக கிழக்கில் உதித்த நட்சத்திரம் சாஸ்திரிகளுக்கு வழி காட்டியது. மத். 2:10 ல் "அவர்கள் அந்த நட்சத்திரத்தை கண்டபோது மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள்". நட்சத்திரம் சாஸ்திரிகளுக்குச் சரியான வழியைக் காட்டி இயசே பிறந்த இடம் வரை வழி நடத்தியது, மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது. இன்றைக்கு நம் வீடுகளில் தோன்றும் நட்சத்திரங்கள் அல்ல நாம்தான் கிறிஸ்துவின் ஒளியாக பிரகாசித்து அநேகரை கிறிஸ்துவண்டை நடத்தும் நட்சத்திரங்களாக மாற வேண்டும். "உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக்கடவது" என்று இயேசு கூறினார். விடிவெள்ளி நட்சத்திரமான இயேசுவை நம்மில் அநேகர் காண நட்சத்திரங்களாக வழிகாட்டுவோம்.

**இவ்வளவாய் அன்புகூர்ந்த பிதாவாகிய தேவன்**

கடைசியாக இயேசுகிறிஸ்துவுக்காக தேவனைத் துதிப்போம். பிதாவாகிய தேவன் தம் ஒரே பேரான குமாரனாகிய இயேசுவை நமக்காக ப–யாக ஒப்புக் கொடுத்தார். பிதா நம்மீது வைத்துள்ள அன்பிற்காக தேவனைத் துதிப்போம். குமாரனாகிய இயேசுவும் நம் மீது கொண்ட அன்பிற்காக, தம்மையே தாழ்த்தி, எளிய கோலம் கொண்டு, சிலுவையில் மரண பரியந்தம் தம்மை நமக்காக கொடுத்தாரே! அதற்காக நாம் குமாரனாகிய இயேசுவை துதிப்போம்.

**தேவன் அருளிய சொல்-முடியாத ஈவுக்காக (இயேசுவுக்காக) அவருக்கு ஸ்தோத்திரம்.** (2கொரி. 9:15)

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை மிக சமீபம் என்று வானத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் விசுவாசியே இயேசுவின் முதல் வருகையின் (கிறிஸ்துவின் பிறப்பின்) நற்செய்தியை ஒரு முறை கூட அறியாத பல கோடி மக்களுக்கு சுவிஷேசம் அறிவிப்பதில் உன்னுடைய பங்கு என்ன?

# பணித்தள சாட்சிகள்

தேவனுக்கே மகிமை

**சகோ. வீர்சிங்பாரியா** **தார்மி (குஜராத்)**

சமீர்பாய் என்ற சகோதரரின் 18 வயது மகன் காய்ச்சல் மற்றும் தலைவ–யினால் கஷ்டப்பட்டான். மருத்துவர்கள் T.B நோய் என்று கூறிவிட்டார்கள். ரூ.15,000 செலவு செய்தும் சுகம் கிடைக்கவில்லை. 6 மாதங்கள் மருந்து சாப்பிட்டும் நோய் அதிகரித்து கொண்டேபோனது. இந்நிலையில் குடும்பத்தார் சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்துகொண்டு விசுவாசத்தோடு ஜெபித்த போது தேவன் மகனுக்கு காய்ச்ச––ருந்து விடுதலைக் கொடுத்தார்.

**சகோ. கன்னு பாபோர்** **மால்வாசி (குஜராத்)**

கராடு கிராமத்தைச் சேர்ந்த சப்புராபாய் என்ற 38 வயது சகோதரன் வலது கையில் கேன்சர் கட்டியினால் 8 மாதமாக மிகவும் கஷ்டப்பட்டார். அநேக மருந்துகள் சாப்பிட்டும் சுகம் கிடைக்கவில்லை. சபையில் நடைபெற்ற ஆராதனையில் தொடர்ந்து கலந்து கொண்டு ஜெபித்த போது சகோதரருக்கு தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. ரத்தன்சிங் பார்மர்** **கலாசியா (குஜராத்)**

கலசியா கிராமத்தைச் சேர்ந்த தேவாபாய் என்ற சகோதரர் நெஞ்சுவ– மற்றும் தலைவ–யினால் மிகவும் கஷ்டப்பட்டார். சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்த போது தேவன் சுகத்தை கொடுத்தார்.

**சகோ. கல்சிங் குண்டியா** **அன்டர் (குஜராத்)**

சன்னுபேன் என்ற சகோதரி கழுத்தில் கட்டியினால் மிகவும் கஷ்டப்பட்டாள். சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்த போது கட்டி மறைய தேவன் கிருபை செய்தார்.

**சகோ. பீம்சந்த் கட்டாரா** **பண்டாரியா (இராஜஸ்தான்)**

டிமேடா கிராமத்தைச் சேர்ந்த பூனாபேன் என்ற சகோதரிக்கு பைத்தியம் பிடித்துவிட்டது. அதிக பணம் செலவு செய்தும் மருத்துவம் மற்றும் மந்திரகிரியைகள் செய்தும் எந்தவித பலனுமில்லை. நம்முடைய சபையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்த போது தேவன் பைத்தியத்தி–ருந்து விடுதலை கொடுத்தார்.

**சகோ. மான்சிங் K. பாரியா** **கோய்க்கா (இராஜஸ்தான்)**

மங்கிளிபேன் என்ற சகோதரியை பாம்பு கடித்து சரீரத்தில் விஷம் ஏறியது. மருத்துவம் செய்தும் எந்தவித பலனுமில்லை. இறுதியாக ஜெபஎண்ணெய் பூசி ஜெபித்த போது விஷத்தை இறக்கி சகோதரிக்கு தேவன் ஜீவனைக் கொடுத்தார்.

**சகோ. வில்–யம் டாமோர்** **ஜீவகூட்டா (இராஜஸ்தான்)**

ஜீவகூட்டா கிராமத்தைச் சேர்ந்த மான்ஜிபாய் என்ற 55 வயது சகோதரர் 5 வருடமாக வயிற்று வ–யினால் மிகவும் கஷ்டப்பட்டார். அதிக பணம் செலவு செய்தும் மருத்துவம்

மற்றும் மந்திரகிரியைகள் செய்தும் எந்தவித பலனுமில்லை. நம்முடைய சபையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்த போது தேவன் சுகத்தை கொடுத்தார்.

**சகோ. ஈஸ்வர்லால் டின்டோர் பர்னாலா (இராஜஸ்தான்)**

பாங்கிளிபேன் என்ற சகோதரிக்கு முழு சரீரமும் வியாதிப்பட்டு இரத்தபோக்கு வியாதியும் இருந்தது. அநேக மந்திரம் மற்றும் மருத்துவம் செய்தும் பயனில்லை. கடைசியில் நம்முடைய கூட்டத்திற்கு வந்து ஜெபித்தபோது தேவன் அற்புதமாக சுகம் கொடுத்தார்.

**சகோ. கோர்சிங் புரியா சாரேல் (மத்தியபிரதேசம்)**

ராசன் பூரியா என்ற 38 வயது சகோதரன் கடந்த 20 வருடமாக வியாதியினால் பாதிக்கப்பட்டு கட்டி–ல் படுத்த படுக்கையாக இருந்தார். இவரை பல இடங்களுக்குக் கொண்டு சென்று அநேக மருத்துவம் மற்றும் மந்திரங்கள் செய்தும் சுகம் கிடைக்கவில்லை. இறுதியாக நம்முடைய சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்திற்கு கொண்டு வந்தார்கள். "வேதத்தில் இயேசு திமிர்வாதக்காரன் ஒருவனை 4 பேர் கட்டி–ல் வைத்து இயேசு இருந்து வீட்டின் மேல் கூரையைப் பிரித்து உள்ளே இறக்கினார்கள். இயேசு அவர்கள் விசுவாசத்தைக் கண்டு அந்த திமிர்வாதக்காரனை சுகப்படுத்தினார்" என்ற செய்தியை அளித்தேன். அதைக் கேட்ட அந்த சகோதரனுக்குள் ஒரு விசுவாசம் வந்தது. பரிசுத்த ஆவியானவர் தம்முடைய வல்லமையால் இவரை நிரப்பினார். உடனே எழும்பி நடக்க ஆரம்பித்தார். எல்லா வியாதிகளும் மறைந்தது.

**சகோ. பாலுசிங் பாரியா மேந்திகேடா (மத்தியபிரதேசம்)**

பபேரிபேன் என்ற சகோதரிக்கு இரட்டை பெண் குழந்தைகள் பிறந்து ஒரு வயதாகி விட்டது. திடீரென ஒரு நாள் இரவில் 2 குழந்தைகளும் பயங்கர வியாதியினால் பாதிக்கப்பட்டு ஆபத்தான நிலைக்கு போய்விட்டது. மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்கு வாகன வசதி இல்லாத காரணத்தினால் வீட்டிலே இருந்தாள். இந்த சகோதரி விசுவாசத்துடன் ஜெப எண்ணெயை 2 குழந்தைகளுக்கும் போட்டு அழுது ஜெபித்தாள். தேவன் ஜெபத்தைக் கேட்டு முத–ல் கண்களைத் திறக்கவும், பேசவும், தொடர்ந்து நடக்கவும் கிருபை செய்தார். இதைக் கண்ட பக்கத்திலுள்ளவர்கள் அதிசயப்பட்டார்கள். உடனே இந்த சகோதரி இயேசுவைப் பற்றிக் கூறினாள். அநேகர் விசுவாசிகளானார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

**சகோ. கோர்சிங் மேடா காட்வாடா (மத்தியபிரதேசம்)**

சோனு என்ற சகோதரர் பிறவியி–ருந்தே வாய்பேச முடியாத ஊமையாக இருந்தான். சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்த போது பேசுவதற்கு தேவன் கிருபை செய்தார்.

**சகோ. மக்கன்சிங் புரியா டேமேரா (மத்தியபிரதேசம்)**

சஜீ சாலங்கி என்ற சகோதரர் கண் சரியாக தெரியாமல் வ–யினால் மிகவும் கஷ்டப்பட்டார். சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்த போது தெளிவான பார்வையை தேவன் கொடுத்தார்.

பீல் சுதேச ஊழியர்களுக்கும்,
சிறு பிள்ளைகளுக்கும்

# கிறிஸ்துமஸ் வெகுமதி

அன்பார்ந்த ஷாலோம் ஊழிய ஆதரவாளர்களே!

ஷாலோம் மிஷனெரி பணியில் தேவன் உங்களையும் இணைத்து பீல் ஆதிவாசி மக்களுக்கு ஆசீர்வாதமாக பயன்படுத்தி வருகிறபடியால் தேவனைத் துதிக்கிறோம்.

வருடந்தோறும் கிறிஸ்மஸ் மனமகிழ்ச்சியின் நாட்களில் நம்முடைய சுதேச ஊழியர்களுக்கும் அவர்கள் மனைவிமார்களுக்கும், அவர்கள் பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் கொடுப்பது வழக்கம். மேலும் நம்முடைய பள்ளி, விடுதியில் படித்து வரும் நம் ஆதிவாசி மாணவ, மாணவிகளுக்கும் ஏதாவது உதவி செய்து வருகிறோம். அதன்படி இந்த ஆண்டும் நம் பீல் சுதேச ஊழியர்களுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் புத்தாடைகள், வெகுமதிகள் கொடுக்கலாம் என ஜெபித்து தீர்மானித்துள்ளோம்.

ஆகவே வருகிற மாதத்தில் நமக்கு இதற்காக நிதி உதவி சுமார் ரூ. 6 லட்சம் தேவைப்படுகிறது. ஆகவே கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவினால் ஒரு ஊழியரின் குடும்பத்திற்கு ரூ. 1000/– அல்லது ஒரு ஆதிவாசி பிள்ளைக்கு ரூ. 200/– கிறிஸ்துமஸ் வெகுமதிக்காக கொடுத்து உதவ மிக அன்பாய்க் கேட்கிறோம்.

இந்த வெகுமதி காணிக்கைகளை **டிசம்பர் 15ம் தேதிக்குள்** அனுப்பினால் இந்த மக்களுக்கு மிகவும் துரிதமாக வெகுமதிகளைக் கொடுக்க உதவியாக இருக்கும்.

கிறிஸ்துமஸ் வெகுமதியை நேரடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கலாம். அல்லது எங்கள் ஷாலோம் பிரதிநிதிகளிடம் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளவும்.

இந்த பீல் மக்களின் சந்தோஷத்தோடு கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடுங்கள். தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

*May God Bless You*

# சுதேச ஊழியர் சாட்சி சகோ. குல்லா டாமோர்



இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். என் பெயர் **குல்லா டாமோர்.** நான் இயேசுவை அறிவதற்கு முன்னதாக மிகவும் பாவ வாழ்க்கை வாழ்ந்து வந்தேன். சாராயம் குடிப்பது, சண்டை போடுவது, திருடுவது போன்ற காரியங்களில் ஈடுபட்டிருந்தேன். அந்த சமயம் ஒரு கிறிஸ்தவ சகோதரர் மூலம் இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டேன். அப்பொழுதிருந்தே இயேசுதான் உண்மையான தேவன் என்று விசுவாசித்து சபைக்கு சென்றேன். அதி–ருந்து கெட்டப் பழக்கவழக்கங்களை விட்டுவிட தேவன் உதவினார். தேவனுடைய கற்பனைகளை கைகொள்ள ஆரம்பித்தேன். 1998ஆம் வருடம் இரட்சிக்கப்பட்டேன். அவர் என் மீது அன்புகூர்ந்து என்னை பாவத்தி–ருந்து விடுவித்து எங்கள் குடும்பத்திற்கும் சமாதானம் கொடுத்தார்.

கர்த்தரிடத்தில் அற்புதத்தையும், அபிஷேகத்தையும் பெற்றுக்கொண்ட நான் பாவ வாழ்க்கை வாழ்ந்து குடும்பத்தில் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் இழந்து இருக்கும் என்னுடைய சொந்த பீல் ஜனங்களும் இயேசுவை ஏற்றுக்கொண்டு பாவ வாழ்க்கையி–ருந்து விடுதலை பெறவேண்டும் என்ற ஆத்தும பாரத்தினால் நிரப்பப்பட்டேன். என் சொந்த ஜனங்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க ஷாலோம் ஊழியத்தில் இணைந்து சஜே– என்ற கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறேன். எனக்காகவும், என்னுடைய ஊழியங்களுக்காகவும், தேவன் என்னை ஊழியத்தில் வல்லமையாக பயன்படுத்தும்படியாகவும் ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரை தாங்குபவர்: Living Word Missionary Church, Chennai.

# ஷாலோம் பீல் சுதேச ஊழியர்கள் குடும்ப அபிஷேக முகாம் – 2008

தேவ கிருபையால் இவ்வருடமும் நம்முடைய பீல் சுதேச ஊழியர் குடும்ப முகாம் மிகுந்த ஆசீர்வாதமாய் அமைய தேவன் கிருபை தந்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! மிகுந்த ஜெப ஆயத்தங்களுடன், குறிப்பாக ஷாலோம் சபைகளில் உபவாச ஜெபங்கள், ஊழியர் கூடுகையில் ஜெபம் மேலும் தனிப்பட்ட ஜெபங்கள் என்று ஜெப ஆயத்தங்களைப் பூர்த்தி செய்ய தேவன் கிருபை தந்தார். இந்த கூட்டத்திற்காக ஜெபித்த வேளையில் பரிசுத்த ஆவியானவர் "இரட்டிப்பான ஆசீர்வாதங்களைத் தருவேன்" என்றும் "மகிழ்ந்து களிகூருங்கள்" என்றும் வாக்குரைத்தார்.

இம்முகாம் மேஹம்தாபாத்தில் உள்ள Alliance Conferce Centre –ல் வைத்து நவம்பர் 4–7 வரை நடத்த தேவன் கிருபை தந்தார். தூர இடத்தில் உள்ள ஊழியர்கள் 3ம் தேதி இரவே வந்துவிட்டார்கள். ஷாலோம் அலுவலக ஊழியர்கள், மூத்த சுதேச ஊழியர்கள் ஆயத்தப் பணிகளையும், ஜெப ஊழியங்களை நிறைவேற்ற முன்தினமே சென்றுவிட்டார்கள். 300 பேர்களே தங்கும் வசதியுள்ள Centre –ல் தேவன் 800 பேர்களைத் தங்கள் வைக்க வழிகளைத் திறந்து தந்தார். கூட்டம் நடத்துவதற்கு கரடு, முரடு, புதர்களாயிருந்த மைதானத்தை சீர்படுத்தி அழகான பந்தல், மேடை அமைக்கவும், ஒளி, ஒ– அமைப்புகளையும் தேவன் நேர்த்தியாய் தந்தார்.

04.112008 வெள்ளிக்கிழமை மாலை ஆயத்த கூட்டம் ஆரம்பித்தது. சிறப்புப் பாடல்களைப் பாடி, ஆராதித்து தேவனைத் துதித்து ஆவியானவரின் பலத்த அருள் மாரிக்காக ஜெபித்த பின்பு **சகோ. வே. தேவதாஸ்** அவர்கள் "சின்னவன் ஆயிரமும் சிறியவன் பலத்த ஜாதியுமாவான்" என்ற வாக்குத்தத்த செய்தியை பகிர்ந்து கொண்டார்கள். இதுவரை 100 குடும்பங்கள் என்று ஜெபித்து உழைத்த ஊழியர்கள் தங்களை 1000 குடும்பங்களுக்கு ஆசீர்வாதமாக மாற்ற வேண்டும் என்ற தரிசனத்துடன் அர்ப்பணித்தார்கள். சிறியவர்களாக தங்களை எண்ணிய ஊழியர்கள் பலத்த ஜாதியாக, அப்போஸ்தல சபைகளை ஸ்தாபிக்க வேண்டும் என்கிற விசுவாசத்தை தேவனிடத்தில் பெற்றுக் கொண்டார்கள்.

05.11.2008 அன்று காலையில் துதி ஆராதனையில் தேவ ஆவியானவர் பலத்த கிரியை செய்தார். ஆவியில் களிகூர்ந்து நடனமாடி தேவனை ஆராதித்தார்கள். பரலோகத்தின் தேவதூதர்கள் இறங்கி வந்தார்கள். ஆனந்த் பட்டணத்தி–ருந்து **Pas. Virendra Patel** அவர்கள் குழுவாக வந்து ஆராதனையை

நடத்தித் தந்தார்கள். நம் ஷாலோம் ஊழிய ஆராதனை வீரர் **சகோ. பிராங்க்** மற்றும் **சகோ. ஓரல்** இசைக்கருவிகளை இனிமையாய் இசைக்க **சகோ. பாவ்சிங் கட்டாரா சகோ. விகாஸ் கராசியா, சகோ. அணில் சௌகான்,** ஆகியோரும் மேலும் மூத்த ஊழியர்களும் மேடைக்கு வந்து பாடல்களைப் பாடி பரவசப்படுத்தினார்கள். எத்தனையோ உள்ளடங்கிய கிராமங்களில் தனிமையாக ஊழியம் செய்து கொண்டிருந்த 400க்கும் அதிகமான பீல் சுதேச ஊழியர்கள், ஊழியக்காரிகள் இணைந்து தேவனைத் துதித்த காட்சி மறக்க முடியாததாகும்.

**சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களுக்கும், இயேசு விடுவிக்கிறார் குழுவினர்களுக்கும் இதயத்தின் ஆழத்தி–ருந்து அன்பையும் வரவேற்பையும் கொடுத்து சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் சிறப்பு நடன பாடல் பாடி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்கள் முன்னுரையாக "பீல் மக்கள் வைத்த அன்பையும் தேவன் தந்த ஆத்துமபாரத்தையும், ஒவ்வொரு வருடமும் பீல் மக்கள் மத்தியில் ஊழியத்தையும், ஊழியர்களையும் கண்டு ஊழியம் செய்வது மகிழ்ச்சியும், அவர்களுக்கும் புதிய உற்சாகத்தையும் புதிய அபிஷேகத்தையும் தருகிறது" என்று கூறியபோது அனைவரும் மன மகிழ்ந்து தேவனைத் துதித்தார்கள். மேலும் "இந்திய தேச எழுப்புத–ல் குறிப்பாக வட இந்தியாவை தேவன் சந்திக்க பீல் மக்களாகிய உங்களையும், தேவன் உங்களுக்குத் தந்த ஷாலோம் சபைகளையும், ஊழியத்தையும் அதிகமாகப் பயன்படுத்துவார்". என்று ஆவியானவரால் வார்த்தைகளைத் தந்தபோது தரிசனம் உறுதியாக விரிவடைந்தது.

முதல் செய்தியாக **"சோர்ந்து போகிறவனுக்கு சத்துவத்தை பெலனைத் தருகிற தேவன்"** என்ற தலைப்பில் செய்தியை **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்கள் கொடுத்தார்கள். புத்திரபாக்கியம் இல்லையே என்று வாக்குத்தத்தம் பெற்ற **ஆபிரகாம்** சோர்ந்த போது அவனை தேவன் எப்படி பலப்படுத்தினார் என்பதையும், தேவன் வல்லமையாக பயன்படுத்திய தீர்க்கதரிசி **எ–யா** சூழ்நிலை காரணமாக எதிர்ப்பின் குரல் கேட்டு மரணபயத்தினால் சோர்ந்து போன தேவ மனிதன் எ–யாவை எப்படி அப்பம், தண்ணீர் கொண்டு பலப்படுத்தினார் என்பதையும் தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து கெத்சமேனே தோட்டத்தில் தனிமையாக ஜெபிக்கும் வேளையில் அவரை பலப்படுத்த பிதாவாகிய தேவன் தேவதூதனை அனுப்பிப் பெலப்படுத்தினார் என்பதை விளக்கி கூறும் போதே ஆவியானவர் இறங்கி ஒவ்வொருவரையும் பெலப்படுத்தினார். ஜெபவேளையில் அநேகரை விடுவித்தார். வாக்குத்தத்தங்களைத் தந்து உற்சாகப்படுத்தினார். புதிய அபிஷேகத்தினால் அனைவரையும் நிரப்பினார். பீல், பிலோடி, பாகுடி ஆகிய கிராமிய சிறப்புப் பாடல்களை பாடி துதித்தார்கள்.

**05.11.2008** மதியம் சகோ. சாம் ஜெபராஜ் (இயேசு விடுவிக்கிறார்) அவர்கள் "நான் உன்னைவிட்டு விலகுவதில்லை உன்னை கைவிடுவதில்லை" என்று மோசேயுடன் இருந்த தேவன் யோசுவாவோடும் இருந்து நடப்பித்த காரியங்களை எடுத்துரைத்து ஊழியத்தில் இன்னும் வளருவதற்கு ஆலோசனைகளையும் எடுத்துரைத்து விஷேசித்த சாட்சிகளுடன் அனைவரையும் ஊக்கப்படுத்தி ஜெபித்தார்கள்.

அன்று மாலையில் அலுவலக ஊழியர்கள் சிறப்புப் பாடல்கள், நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிறைந்து போராடி ஜெபிக்கும் அனுபவத்தை வேதத்தி–ருந்து எடுத்துரைத்தார்கள். மிக ஆழமான அனுபவங்களை எடுத்துரைத்து நம் தேசத்தை தேவனுக்கு சுதந்தரிக்க பலவானை எப்படி கட்டுவது? எப்படி ஜனங்களை கட்டுகளி–ருந்து கட்டு அவிழ்ப்பது என்று ஜெப வாழ்க்கையின் உன்னத அனுபவங்களுக்கு வழி நடத்தினார்கள். இரண்டு, இரண்டு பேர்களாய் சொந்த கிராமங்களுக்காக, சொந்த ஜனங்களுக்காக, தேசத்திற்காக போராடி ஜெபிக்க, ஆவியானவர் வல்லமையாய் இறங்கி ஜெப ஆவியை ஊற்றினார். இரவு உணவு வேளைக்குப் பின்பாக சுதேச ஊழியர்கள் 3,4 குடும்பங்களாக இணைந்து ஆவியானவரால் நிரப்பப்பட்டு, போராடி ஜெபித்தார்கள். ஆவியில் ஊழியத்தின் வெற்றிகளைக் கண்டு தேவனைத் துதித்தார்கள்.

**06.11.2008** அன்று காலை அனைத்த ஊழியர்களும் வெள்ளை சீருடை அணிந்தவர்களாய், ஊழியக்காரிகளும் தேவன் தந்த புத்தாடைகளை அணிந்து மிக நேர்த்தியாக பாடல் பாடி ஆராதனை செய்தார்கள். பரலோகமே இறங்கி வந்ததைப் போல் காட்சியளித்தது. **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்கள் இயேசு கிறிஸ்து பன்னிரெண்டு அப்போஸ்தலர்களை எதற்காக அழைத்தார் என்பதைக் குறித்து தெளிவாக ஊழியர்களுடன் பேசும்போது ஆவியானவர் மிக நெருக்கமாய் செயல்பட்டார்.

1. இயேசுவோடு கூட இருக்கும் அனுபவம்.

2. இயேசுவைப் போல் கிராமங்கள் தோறும் பட்டிணங்கள் தோறும் பிரசங்கம் செய்து நற்செய்தி அறிவிக்கும் அனுபவம்.

3. அவர்களுக்கு இயேசு பிசாசு பிடித்தவர்களையும், நோய்களையும் குணமாக்க கொடுத்த அதிகாரத்தின் அனுபவம்.

இவைகளைப் பிரசங்கித்து முடிப்பதற்கு முன்பாக அனைவர் மீதும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் வல்லமை, இயேசுவின் மேல் வந்த வல்லமை அபரிமிதமாக ஊற்றப்பட்டது. பரிசுத்த ஆவியானவர் மேலறை அனுபவத்தை, அக்கினிமயமாக நிரம்பிட, வரங்களினால் நிரம்பிட கிருபை தந்தார். இறுதியாக

ஒவ்வொருவர் மீதும் கரங்களை வைத்து ஜெபிக்கும் போது ஒவ்வொருவரும் மன்றாட்டின் ஆவியினாலும் ஆத்தும பாரத்தினாலும் நிரப்பப்பட்டார்கள்.

இறுதிநாள் 07.11.2008 அன்று காலை தேவனை ஆராதித்து துதித்தபின்பு சகோ. தேவதாஸ் அவர்கள் "தேவன் எப்படிப்பட்ட சபையை எழுப்ப விரும்புகிறார்" என்ற தலைப்பில் ஆதி அப்போஸ்தல சபை குறித்து பேசும்போது

1. சபை உயிர்த்தெழுந்த இயேசுவின் அதிகாரத்திற்குட்பட்டது.

2. சபையில் ஒவ்வொருவரும் தேவனால் பயன்படுத்தப்பட்டு சாட்சிகளாய் விளங்க வேண்டும்.

3. சபையில் அனைவரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, வரங்களும், கனிகளும் நிறைந்து காணப்படவேண்டும்.

4. கிறிஸ்துவின் வருகைக்கு மணவாட்டியான சபை ஆயத்தமாக இருக்கவேண்டும். செய்தி வேளையில் அனைவரும் கிறிஸ்துவுக்குள் வைராக்கியமாக ஷாலோம் சபைகளை ஆதி அப்போஸ்தல சபைகளை போல் உருவாக்குவோம் என தீர்மானித்து அர்ப்பணித்த வேளையில் தேவன் புது கிருபையை ஊழியர்கள் குடும்பங்கள் மீது ஊற்றினார்.

**சகோ. தேவதாஸ் மற்றும் சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களுக்காக **சகோ. மோகன் சி. லாசரஸ்** ஜெபித்து தேவனுடைய தீர்க்கதரிசன வார்த்தைகளை ஊழியத்திற்காக கொடுத்தார்கள். மேலும் **சகோ. மோகன் சி. லாசரஸ்** மற்றும் இயேசு விடுவிக்கிறார் குழுவினர்களுக்காக **சகோ. தேவதாஸ்** குடும்பத்தினரும், ஷாலோம் மூத்த சுதேச ஊழியர்கள் அனைவரும் இணைந்து சிறப்பு பிராத்தனை ஏறெடுத்தார்கள். தேவன் சகோதரர் குடும்பத்தையும், இயேசு விடுவிக்கிறார் ஊழியங்களையும் பலமடங்கு ஆசீர்வதித்து இன்னும் பல இலட்சங்களுக்கும் அநேக ஊழியங்களுக்கும் ஆசீர்வாதமாய் மாற்றுவார். இன்னும் வல்லமையாக பயன்படுத்துவார். இறுதியில் கர்த்தருடைய பந்தி வெகு பக்தியுடன் இயேசுவின் அன்பை வெளிப்படுத்தும் வகையில் ஏறெடுக்கப்பட்டது. அப்பமும், திராட்சை ரசமும் வழங்கும்போது சுதேச ஊழியர்கள், ஊழியக்காரிகள் கண்களில் வந்த கண்ணீர் இயேசுவின் மீது வைத்த அன்பை வெளிப்படுத்தியது.

மதிய வேளையில் சிறப்பு பாடல்களை பாடி மகிழ்ந்தபின்பு **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் ஆவிக்குரிய வரங்களை குறித்து பரிசுத்த ஆவியானவரின் ஏவுத—ன்படி தீர்க்கதரின வார்த்தையைக் குறித்து தேவனுடைய செய்தியை கொடுத்தார்கள். ஜெபவேளையில் அனைவரின் மீதும் அபரிதமாக ஆவியானவர் இறங்கி வந்தார். கிட்டதட்ட அநேகர் தீர்க்கதரிசன வரங்களை பெற்று மற்றவர்களுக்கு தீர்க்கதரினங்களை உரைத்தும், தேவன் தந்த

தரிசனங்களையும், தங்கள் கிராமத்தைக் குறித்து தங்கள் ஊழியங்களை குறித்து தேவன் தந்த திட்டங்களையும் பெற்று முன்னால் மேடையில் வந்து அநேகர் சாட்சிகளை கொடுத்தார்கள்.

மாலை சந்தியாவேளையில் மிகவும் தேவபிரசன்னம் நிறைந்து காணப்பட்டது. குடும்பம், குடும்பமாக வரிசையாக அழகாக காட்சியளித்து அமர்ந்து ஆராதித்தார்கள். சிறப்பு தனிபாடல்கள், குழுவாக பாடல்களை பாடி தேவனை மகிமைப்படுத்தினார்கள். சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள் பரிசுத்த ஆவியால் நிறைந்து மன்றாடி ஜெபிப்பதைக் குறித்து தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்துகொண்டார்கள். ஜனங்களுக்காக எப்படி பரிந்து மன்றாடி ஜெபிப்பது என்பதைக் குறித்து எஸ்தர், நெகேமியாவைப் பற்றி விளக்கி இறுதியாக இயேசுகிறிஸ்து கெத்சமனே தோட்டத்தில் மன்றாடி ஜெபித்த ஆத்துமபாரத்தை விளக்கும்போது பந்தலுக்கு கீழே ஒவ்வொருவர்மீதும் மன்றாட்டு ஜெப ஆவியை தேவன் ஊற்றினார். அனைவரின் இருதயங்களும் உடைக்கப்பட்டு ஆத்துமபாரத்தினால் நிரப்பப்பட்டார்கள்.

அனைவருடைய கண்களி–ருந்தும் தாரை தாரையாக கண்ணீர் வடிய "என் கிராமம், என ஜனங்கள் இரட்சிக்கப்பட வேண்டும்" என்று ஏங்கி, ஏங்கி அழுத குரல் பரலோகத்தை எட்டியது. ஒவ்வொருவருடைய ஊழிய தரிசனமும், தனிப்பட்ட ஜெப வாழ்வும் மாறியது. கூட்டம் முடிந்தபின்பும் ஒருவரும் எழும்ப மனமற்றவர்களாய் தங்கள் குடும்பம் குடும்பமாய் மறுபடியும் ஜெபிக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஷலோம் ஊழியப் பாதையில் இந்த இரவு மறக்கமுடியாத இரவு என்று கூறலாம்.

நான்கு நாட்களும் நல்ல தங்கும் வசதிகள் மற்றும் சிறப்பாக உணவு வழங்கப்பட்டது. அனைத்து ஊழியர்களுக்கும் இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் சார்பில் அழகான Bags வழங்கப்பட்டது. மேலும் வேதாகம தேர்வில் சிறப்பாக மதிப்பெண்கள் பெற்ற 20 பெண்களுக்கு சிறப்பு வெகுமதிகள் வழங்கப்பட்டது. இயேசு விடுவிக்கிறார் சார்பில் ரூ.3,50,000/– கூட்டச் செலவுக்காக கொடுக்கப்பட்டது. தேவ கிருபையாலும், உங்கள் யாவரின் ஜெபங்களினாலும் இம்முகாம் மிக ஆசீர்வாதமாக நிறைவுற்றது. 2010–க்குள் 1000 சபைகள் 1000 சுதேச ஊழியர்கள் 3 லட்ச ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கும் தரிசனத்தை நிறைவேற்ற அனைவரும் புறப்பட்டு சென்றார்கள். எங்கள் குடும்பத்தையும், ஷாலோம் ஊழியத்தையும், பீல் மக்களையும் நேசித்து ஜெபித்து தாங்கி வரும் **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களுக்காகவும், இயேசு விடுவிக்கிறார் ஊழியத்திற்காகவும் தேவனைத் துதிக்கிறோம். நீங்கள் யாவரும் **அன்பு சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களுக்காக ஜெபிக்கும்படியாக கேட்டுக்கொள்கிறேன். அல்லேலூயா! தேவனுக்கே மகிமை!

ஜெபித்த உங்கள் யாவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

# ஷாலோம் சுதேச ஊழியர் குடும்ப முகாம் - 2008



தேவனால் பயன்படுத்தப்பட்ட பாத்திரங்கள்





சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு




சுதேச ஊழியர்கள் நடனமாடி தேவனை ஆராதிக்கிறார்கள்




திருவிருந்து ஆராதனை

# ஷாலோம் சுதேச ஊழியர் குடும்ப முகாம் - 2008









சொந்த பீல் மக்களின் இரட்சிப்பிற்காக பாரத்தோடு ஜெபிக்கும் ஷாலோம் சுதேச ஊழியர்களும் அவர்களுடைய மனைவிமார்களும்





சகோ. மோகன். சி. லாசரஸ் அவர்களுக்காக, பணித்தள அலுவலக ஊழியர்களுக்காக
சகோ. தேவதாஸ் அவர்கள் குடும்பத்திற்காக ஜெபங்கள் ஏறெடுக்கப்படுகிறது.







சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள் சுதேச ஊழியர்களை
அபிஷேகத்திற்குள் நடத்துகிறார்கள்





இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் மூலமாக ஊழியர்களுக்கு
Bag வழங்கப்படுகிறது





வேதாகம தேர்வில் பெற்றி பெற்ற பெண்களுக்குப் பரிசு வழங்குதல்





பணித்தள அலுவலக ஊழியர்களின் சிறப்புப் பாடல்





மூன்று நாள் முகாமில் ஊழியர்கள் குடும்பத்திற்கு உணவு வழங்கப்பட்டது

**இந்த முகாமிற்காக ஜெபித்த உங்கள் யாவருக்கும்
மனமார்ந்த நன்றியை தெரிவிக்கிறோம்.**

## களச்செய்திகள்...

**குஜராத்**

### துதியுங்கள்

- கல–யாவட் கிராமத்தில் கடந்த மாதம் கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனைகளில் 1100 விசுவாசிகள் பங்குபெற்று தேவனைத் துதித்துப் பாடி ஆராதித்தார்கள். ஞாயிறு பள்ளியில் 115 சிறுவர்கள் பங்குபெற்றார்கள்.
- கார்வானி கிராமத்தில் விசுவாசத்தி–ருந்து விலகிப்போன 5 குடும்பங்கள் திரும்பவும் ஆலயத்திற்கு வந்தனர்.
- ஜெரிகோட் கிராம சபையில் ஞாயிறு ஆராதனையில் 900 பேர் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். ஞாயிறு பள்ளியில் 65 பிள்ளைகள் கலந்து கொள்கிறார்கள்.
- கட்லா கிராமத்தில் கடந்த மாதம் கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறுஆராதனையில் 500 பேர் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள்.

### ஜெபியுங்கள்

- ஹார்பர்புரா கிராமத்தில் ஆலயம் கட்டப்படவும், ஊழியத்திலுள்ள தடைகள் நீங்கவும் ஜெபியுங்கள்.
- பாரேவ கிராமத்தில் தேவன் ஆலயத்தைக் கட்டவும் இன்னும் அதிக எழுப்புதலை அந்த கிராமத்திலும், சபையிலும் தேவன் தரவும் ஜெபியுங்கள்.
- தாத்கட் கிராமத்தில் 2009ம் ஆண்டிற்குள் ஆலயம் கட்டப்படவும், அந்த கிராமத்தில் அநேக அற்புதங்கள் நடைபெறவும் ஜெபியுங்கள்.
- நெல்சூர் கிராம மக்கள் அனைவரும் இயேசுவை ஏற்றுக் கொள்ளவும், சபையில் தேவன் புதிய குடும்பங்களைத் தரவும், ஊழியரின் வீடு முழுமையாக கட்டி முடிக்க பணத்தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

**இராஜஸ்தான்**

### துதியுங்கள்

- ராவ்தாசாத் கிராமத்தில் கடந்த மாதம் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் 85 பேர் ஆர்வத்துடன் பங்குபெற்றார்கள். அதில் 10 பேர் தேவன் கொடுத்த சுகத்திற்காக சாட்சி கூறினார்கள்.
- முனியகூட்டா கிராமத்தில் கடந்த மாதத்தில் நடைபெற்ற விசேஷித்த சுகமளிக்கும் கூட்டத்தில் 110 பேர் ஆர்வத்துடன் பங்குபெற்றார்கள். அதில் அநேகரை தேவன் தொட்டு சுகப்படுத்தினார். 25 பேர் தேவன் செய்த நன்மைக்காக சாட்சி கூறினார்கள்.

- ராம்சுபாய் என்ற சகோதரனின் மனைவிக்கு தேவன் ஜெபத்தின் மூலமாக சுகப்பிரசவத்தைக் கொடுத்தார்.
- கோட்டாரா கிராமத்தில் ரத்னபேன் என்ற சகோதரி கடந்த 2 வருடங்களாக அந்தகாரக் கிரியைகளில் சிக்கி மிகவும் பெலவீனமாக இருந்தாள். இந்த சகோதரன் சுகமளிக்கும் கூட்டத்திற்கு விசுவாசத்துடன் வந்து ஜெபித்தபோது தேவன் பூரண சுகத்தையும், விடுதலையையும் கொடுத்தார்.

**ஜெபியுங்கள்**

- இட்டாலா கிராமத்தில் பாபுலால்பாய் என்ற சகோதரன் 2 வருடமாக கண்பார்வை இழந்து காணப்படுகிறார். தேவன் இவருக்கு நல்ல கண்பார்வையைக் கொடுக்கும்படியாக ஜெபியுங்கள்.
- சூடாத்தா கிராம மக்கள் அனைவரும் இயேசுவை ஏற்றுக் கொள்ளவும், கிராமத்தில் தேவன் மின்சார வசதி செய்து தரவும் ஜெபியுங்கள்.
- பிச்சவாடா கிராம மக்கள் அனைவரும் இயேசுவை ஏற்றுக் கொள்ளவும், ஊழியத்திற்கு விரோதமாக செயல்படும் மந்திரவாதிகள் மற்றும் குடிகாரர்கள் தேவனால் தொடப்படவும் ஜெபியுங்கள்.
- சிமல்கேடா கிராமத்தில் சாத்தானின் கிரியைகளைக் செய்யும் பூஜாரிகள் சந்திக்கப்படவும், ஹேம்ஜி என்ற மனநிலை சரியில்லாத சகோதரன் குணப்படவும் ஜெபியுங்கள்.

### மத்தியபிரதேசம்

**துதியுங்கள்**

- குட்டாயா கிராமத்தில் கடந்த மாதம் நடைபெற்ற சிறப்பு சுகமளிக்கும் கூட்டத்தில் 406 பேர் ஆர்வத்துடன் பங்குபெற்றார்கள். அதில் அநேகரை தேவன் தொட்டு அற்புத சுகத்தைக் கொடுத்தார்.
- ஹாஸ்ல்வாட் கிராமத்தில் புதிதாக இயேசுவை ஏற்றுக் கொண்டு விசுவாசத்தில் வளர்ந்து வரும் 2 பேருக்காக தேவனைத் துதியுங்கள். 22 பேர் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானத்தின் மூலமாக கிறிஸ்துவை அறிக்கையிட்டார்கள்.
- நாகன்கேடி கிராமத்தில் இயேசுவை அறியாத ஒரு சகோதரன் கண் பார்வை இல்லாமல் இருந்தார். இவரை சுகமளிக்கும் கூட்டத்திற்கு அழைத்து வந்தார்கள். ஊழியர் மற்றும் விசுவாசிகள் அனைவரும் இவருக்காக விசுவாசத்துடன் ஜெபித்தபோது தேவன் கண்களில் பார்வையைக் கொடுத்தார்.

- உதய்ப்பூரா கிராமத்தில் கடந்த மாதம் கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனைகளில் 736 விசுவாசிகள் பங்குபெற்று தேவனைத் துதித்துப் பாடி ஆராதித்தார்கள். ஞாயிறு பள்ளியில் 235 பேர் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்வில் முன்னேறி வருகிறார்கள்.

### ஜெபியுங்கள்

- நகாரி கிராம மக்கள் அனைவரும் இயேசுவை ஏற்றுக் கொள்ளவும், சபையில் தேவன் எழுப்புதலைத் தரும்படியாகவும், புதிய கிராமங்களில் ஊழியம் நடைபெறவும், சபைகள் உருவாகவும் ஜெபியுங்கள்.
- முனியவட்டா கிராமத்தில் சபைக்கு விரோதமாக பிசாசு கொண்டு வரும் எல்லா போராட்டங்களையும் தேவன் மாற்றும்படியாகவும், ஜாபுபேன் என்ற சகோதரி வியாதியி–ருந்து சுகமடையவும் ஜெபியுங்கள்.
- ஜுனாகாவாசா கிராமத்தில் ஊழியத்தில் எந்த விதத் தடைகளும், எதிர்ப்புகளும் வராமல் தேவன் பாதுகாக்கவும், சபை வளர்ந்து பெருகவும் ஜெபியுங்கள்.
- குண்டாலா கிராம மக்கள் அனைவரும் இயேசுவை ஏற்றுக் கொள்ளவும், ஊழியரின் கடன் பிரச்சனைகளை தேவன் மாற்றவும், விசுவாசிகள் குடும்பங்களை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

## குஜராத் பணித்தள அலுவலகத்திற்கு ஊழியர்கள் தேவை

தேவ கிருபையினால் கடந்த 17 ஆண்டுகளில் நம் ஷாலோம் ஊழியங்கள் விரைவாக வளர்ந்து வருகிறது. ஆகவே குஜராத்திலுள்ள தாகோத் பணித்தள அலுவலகத்தில் பணிபுரிய நமக்கு ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள்.

1. Accounts கவனிப்பதற்கு.
2. Communication கவனிப்பதற்கு.
3. சிறுவர் விடுதி ஊழிய திட்டங்களை கவனிப்பதற்கு.

இந்தப் பணிகளைச் செய்ய மூன்று ஊழியர்கள் நமக்கு உடனடியாக தேவைப்படுகிறார்கள் ஆகவே வட இந்திய ஊழியத்திற்கு அர்பணித்த பட்டப்படிப்பு படித்த ஆங்கிம் எழுத, பேச தெரிந்தவர்கள் குடும்பமாகவோ அல்லது தனி நபராகவோ இருப்பீர்களானால் எங்களோடு தொடர்பு கொண்டு உங்களது Bio-Data வை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். மேலும் சகோ. தேவதாஸ் அவர்களோடு தொடர்பு கொள்ளலாம்.

**செல் போன் : 09377445468**

# Yesu Piranthar - இயேசு பிறந்தார்

**கிறிஸ்துமஸ் பாடல்**

Composed by : **JAM**



**இயேசு பிறந்தார், இயேசு பிறந்தார்**
**எந்தனை மீட்டிடவே, விண் வாழ்வு தந்திடவே**

**நன்றி மறவேன் பொற்பாதம் பணிவேன்**
**மகிழ்ந்து பாடுவேன் அல்லேலூயா**

**ஆ, அல்லேலூயா (3) அல்லேலூயா**

**1.** **பூமியில் மனிதனைப் படைத்த தேவன்**
**பாவத்தால் விசனமுற்றார்**
**ஜலத்தால் அழித்திட நினைத்த தேவன்**
**நோவாவின் பேழையும் தந்தார் – நல்ல**
**மீட்பின் வழியும் வகுத்தார் – இயேசு**

2. அலைகள் சீறிடும், பூமி பிளந்திடும்
கொலைஞரும் நிறைந்திடுவார்
வலையினில் சிறைப்பட்ட மானிடரை இயேசு
விலை தந்து மீட்க வந்தார் – நம்மை
விலை தந்து மீட்க வந்தார் – இயேசு

3. இயேசுவின் முன்னணை தாலாட்டுப் பாடிட
பெருந்திரள் கூட்டமுண்டு
ஆத்துமா மகிழ்ந்து துதித்துப் பாடிட
எத்தனை பாடல்கள் உண்டு – நம்மில்
எத்தனை பக்தர்கள் உண்டு – இயேசு

---

**இந்தப் பாடல் பிறந்த விதம் :–**

இந்தப் பாடலை கர்த்தர் எனக்குத் தந்தபோது உலகத்தில் பல பகுதிகளில் சுனாமி, பூமி அதிர்ச்சி, தீவிரவாதிகளின் வன் முறைகளைப் பற்றிய செய்திகள் கிட்டத்தட்ட தினமும் செய்தித் தாள்களில் வந்து கொண்டிருந்தன. அப்பாவி மக்களும் கூட்டம் கூட்டமாக அழிந்தார்கள். இந்த சூழ்நிலைகளிலும் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் வழக்கம்போல நடந்தன. ஆட்டமும், பாட்டமும் கலை நிகழ்ச்சிகளும் களைகட்டியிருந்தன. என் உள்ளத்தில் ஒரு கேள்வி. கிறிஸ்துவின் பிறப்பை கொண்டாடி மகிழும் இவர்களில் எத்தனைபேர் மோட்சம் போய் சேருவார்கள்? என்பதுதான். அன்றைக்கு ஜலப்பிரளயத்தி–ருந்து தப்ப ஒரு நோவாவின் பேழை இருந்தது போல தேவன் கிருபையாக இரட்சிப்பின் வழியை நமக்கு இயேசுவின் மூலம் ஏற்படுத்தி அதற்கான சத்தியத்தையும் நாம் கேட்க வழி வகுத்துள்ளார். ஆயினும் கிறிஸ்துமஸ் பாடல்களில் தாலாட்டு பாடுவோர்தான் அநேகர், இயேசு பாலகனை தூங்கவைத்துவிட்டு, தங்கள் மனம்போல களியாட்டுகளிலும், மதுபானங்களுடன் கூடிய விருந்துகளிலும் பங்குபெற நினைக்கின்றனர். ஆனால் “இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை.” உண்மையில் உள்ளம் மகிழ்ந்து நன்றியுடன் இயேசுவைப் பாடுவோர் மிகச் சிலரே. அந்த சிலரில் நீங்களும் ஒருவரா? அப்படியானால் இந்தப்பாடலை என்னோடு சேர்ந்து பாடுங்கள். உங்கள் வசதிக்காக இசைக் குறியீடுகளையும் (Music Notations) தந்துள்ளேன். வெறும் வெளி அலங்காரமான கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தைத் தவிர்த்துவிட்டு, ஏழை எளிய மக்களோடு உங்கள் மகிழ்ச்சியை இந்த கிறிஸ்துமஸ் நாட்களிலாவது பகிர்ந்து கொள்வீர்களா? **இதற்காக உங்களுக்கு ஓர் இனிய வாய்ப்பு :** ஷாலோம் ஊழியத்தின் மூலம் தாங்கப்படும் பீல் இன சிறுவர்களுக்குச் கிறிஸ்துமஸ் வெகுமதிகளை தாராளமாக கொடுக்கலாம்.

கர்த்தர் உங்களையும், உங்கள் பிள்ளைகளையும், பிள்ளைகளின் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக. உங்களுக்கு எனது அன்பு கனிந்த கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

கிறிஸ்துவின் பணியில்,

**J. அற்புதராஜ் மர்காஷிஸ்**

# பிப்லாய் (ஜொக்டா) (இராஜஸ்தான்) கிராம ஆலயம்



இராஜஸ்தான் மாநிலம் பான்ஸ்வாடா மாவட்டத்தில் உள்ள பாகிதொரா தாலுகாவில் உள்ளடங்கிய இந்த கிராமம் நகரத்தில் இருந்து மிகவும் உள்ளடங்கிய போக்குவரத்து வசதிகள் இல்லாத கிராமம். இவர்கள் வியாதிபட்டால் மந்திரவாதிகளை அணுகுவதும், பூஜை போன்றகாரியங்களை செய்வதும் இவர்கள் வழக்கமாக இருந்தது. இவர்கள் சாராயம் காய்ச்சுவதும், குடிப்பதும், இவர்கள் வழக்கம். இயேசுவின் அன்பை அறியாது பாவம், சாபத்தில் வாழ்பவர்கள், இந்த சூழ்நிலையில் வாழ்ந்தவர்தான் **மங்கு காராசியா**–வும் ஒருவர். 7 வருடமாக கை, கால்கள் பெலன் அற்று நடக்க முடியாத சூழ்நிலையில் வாழ்ந்தார். பூஜை, மந்திரவாதிகளிடம் பல்லாயிரக்கணக்கான பணத்தை செலவு செய்தும் சுகம் கிடைக்காமல் மரித்துவிடலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தபோது ஷாலோம் சுதேச ஊழியர் **பர்த்தாபாய்** மூலமாக 1998ஆம் ஆண்டில் கோடா கிராமத்தில் நடந்த சுகமளிக்கும் கூட்டத்துக்கு சென்று பங்குப் பெற்றார். வியாதியஸ்தருக்காக சுதேச ஊழியர் பாரத்தோடு ஜெபித்தார். அந்த வேளையில் தனது உட–லும் ஏதோ மாற்றத்தை உணர்ந்து தானும் அழுது ஜெபிக்கவே தேவன் அற்புத சுகத்தை கொடுத்து நடக்க உதவி செய்தார். தன் வாழ்க்கையை தேவனுக்கு ஒப்புக் கொடுத்து பரிசுத்தாவியின் வரம் பெற்று லங்காய் கிராமத்தில் 10 குடும்பங்களை ஆண்டவருக்குள் வழி நடத்தினார். பின்பு தனது சொந்த கிராமத்தில் ஊழியத்தை ஆரம்பித்து 18 குடும்பங்களை ஆண்டவருக்குள்ளாக வழி நடத்தி தற்போது காணிக்கையாக தனது சொந்த நிலத்தை கொடுத்தார். இதில் தேவனுடைய நாமம் மகிமைப்பட ஒரு ஆலயம் கட்டப்பட்டுள்ளது. இந்த கிராம ஆலம் **Mr. Jebaraj Thiraviam - Nazareth.** அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியினால் கட்டப்பட்டது.

- உங்கள் விலாசத்தில் மாறுதல்கள், திருத்தங்கள் இருக்குமென்றால் சரி செய்து ***பழைய, புதிய முகவரிகளை*** தெரியப்படுத்துங்கள். ஏனெனில் நாங்கள் அனுப்புகின்ற பத்திரிக்கைகள் பல எங்களுக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றன. உங்களுக்கு ***ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரிக்கைகள்*** வருகிறதென்றால் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

- உங்கள் பகுதியில் நம் மிஷனெரி ஊழியத்தின் பிரதிநிதிகள் இருப்பார்கள் என்றால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக்கொள்ளுங்கள். மேலும் தலைமை அலுவலகத்திற்கு உங்கள் நகல் இரசீதும், பணமும் கிடைத்த பின்பு தலைமை அலுவலகத்தி–ருந்து உங்களுக்கு நன்றிக் கடிதம் அனுப்பி வைக்கப்படும்.

- நம்முடைய அலுவலகப்பணிகள் அனைத்தும் Computer மயமாக்கப்பட்டுள்ளன. அனைத்து ஆதரவாளர்களுக்கும் குறியீட்டு எண் (Sponser ID No) கொடுக்கப்பட்டுள்ளது. எனவே நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளும்போது தங்கள் குறியீட்டு எண்ணை (Sponser ID No) தவறாது எழுதுங்கள்.

- நீங்கள் அனுப்புகின்ற காணிக்கை, மணியார்டர், டிராப்ட், காசோலை மற்றும் கடிதங்களுக்கு அதிகபட்ச இரு வாரங்களுக்குள் இரசீதும், நன்றிக் கடிதமும் வரவில்லையென்றால், உடனடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்குத் தொலைபேசி அல்லது கடிதம் மூலம் தெரியப்படுத்த வேண்டுகிறோம். அதற்கேற்ற நடவடிக்கை எடுக்க ஏதுவாயிருக்கும்.

- நீங்கள் M.O அனுப்பும் போது எங்களுக்குக் கிழித்துக் கொடுக்கும் பகுதியில் உங்கள் ***தெளிவான முகவரியையும், ஜெபக்குறிப்புகளையும்*** எழுதி அனுப்பினால் உங்களுக்காக பாரத்துடன் ஜெபிக்க மிகவும் ஏதுவாயிருக்கும்.

- எங்களோடு தொடர்பு கொள்ளும்போது உங்களுடைய பங்காளர் எண்ணைக் (Partner No.) குறிப்பிடவும்.

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவனின் பெயர் | : | **ஹட்சன் டாமோர்** |
| தகப்பனார் பெயர் | : | சந்து டாமோர் |
| தாயார் பெயர் | : | கமளிபேன் |
| பிறந்த நாள் | : | 12.03.1995 |
| படிக்கும் வகுப்பு | : | VII |
| சொந்த ஊரின் பெயர் | : | ஹடுமத்கூட்டா |
| தாலூகா | : | ஜாலோத் |
| மாவட்டம் | : | தாகோத் |
| மாநிலம் | : | குஜராத் |
| படிக்கும் பள்ளி | : | I.P. Mission School - Jhalod |
| தங்கி படிக்கும் விடுதி | : | I.P. Mission - Jhalod |

**மாணவனின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–**

ஹட்சன் டாமோரின் தந்தை சந்து டாமோர் பீல் ஆதிவாசி மக்களிலுள்ள ஒரு பூஜாரியினுடைய மகன். இவர் தனது தகப்பனாருடைய மந்திர தொழிலை தானே செய்ய வேண்டுமென்று தீர்மானித்திருந்த போது தேவன் இவரை அற்புதமாய் சந்தித்து, ஊழியத்திற்கு அழைத்தார். நான்கு வருடங்களாக குழந்தை இல்லாமல் இருந்த நேரத்தில் இயேசுவை விசுவாசித்தபடியால், ஆண்டவர் இவருக்கு ஆண் குழந்தையைக் கொடுத்து ஆசீர்வதித்தார். இவருடைய இரண்டாவது மகன்தான் ஹட்சன் டாமோர். சகோ. சந்து டாமோர் தற்போது ஜாப்னி என்ற பகுதியை மையமாக வைத்து ஊழியம் செய்து வருகிறார்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:-**

ஜெபிப்பதிலும், பாடல் பாடுவதிலும் அதிக உற்சாகம் உண்டு. கபடி விளையாட்டில் அதிக ஆர்வம் உண்டு. நன்றாக படிப்பான். படித்து முடித்தபின்பு ஊழியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சை உண்டு.

**ஜெபியுங்கள்:-**

அடிக்கடி வருகிற பெலவீனங்கள் மாறவும், பெற்றோர் செய்கிற ஊழியங்களையும், இவனுடைய குடும்பத்தையும் கர்த்தர் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

**இச்சிறுவனைத் தாங்குபவர் :** **Mas. Vinoth,** Coimbatore.

(இந்த சிறுவனைப் போல் இன்னும் 280 பிள்ளைகளுக்கு ஆதரவாளர்கள் தேவை.)



## காணிக்கை அனுப்புவதற்கான வழிகள்


- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.

| வங்கி கணக்கு பெயர் **Sharing Love Mission** | | |
|---|---|---|
| Tamilnad Mercantile Bank | - | 106100710400009 |
| Axis (U.T.I) Bank | - | 105010100094373 |
| I.C.I.C.I Bank | - | 613901112799 |
| Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி | | |

- இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- வெளிநாட்டில் வசிப்பவர்கள் “V. DEVADOSS” (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.


# நினைவுபடுத்துகிறோம்...

அன்பான உண்டியல் ஆதரவாளர்களே!



தேவ கிருபையினால் பீல் ஆதிவாசி பிள்ளைகளும் நன்றாகப் படித்து முன்னேறி வருகிறார்கள். எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் உள்ள காணிக்கையை இந்த ஆண்டு பீல் ஆதிவாசி பிள்ளைகளின் கிறிஸ்துமஸ் வெகுமதிகளுக்காக உற்சாகத்தோடு கொடுத்து அவர்களின் தேவைகளை சந்திப்பீர்கள் என்று நம்புகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை டிசம்பர் முதல் வாரத்தில் எங்கள் பிரதிநிதிகள் மூலமாக அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து M.O, D.D, Cheque மூலமாக Sharing Love Mission பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறேன். உங்களுக்கு அதைத் திறக்க சாவி (Key) வேண்டுமானால் 09345675468 (சகோ. சாம் குணசீலன்) இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை (Key) அனுப்பி வைக்கிறோம்.

# *சந்தாவைப் பற்றி*




அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள பீல் ஆதிவாசிகள் மத்தியில் நடைபெறும் மிஷனெரி பணிகளுக்காக காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்களுக்கு ஊழியத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும், ஊழியத்திற்காக பாரத்துடன் ஜெபிப்பதற்காகவும் இந்த மலரை அனுப்புகிறோம்.

அன்பான ஆதரவாளர்களே, நீங்கள் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலரைப் பெற்று கொண்டிருப்பீர்களானால் இந்த வருடத்திற்கான (2008) பத்திரிக்கைச் சந்தாவை செலுத்தி பத்திரிக்கை ஊழியத்தை தாங்கவும், பத்திரிக்கை ஊழியம் வளர்ச்சி அடையவும் ஜெபிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**ஆண்டு சந்தா : ரூ.60/–  ஆயுள் சந்தா : ரூ.600/–**

# அலெக்ஸாண்டர் டப்

## மிஷனெரி முன்னோடிகள்



ஸ்காட்லாந்து தேசத்தைச் சேர்ந்த **அலெக்ஸாண்டர் டப்** 1806ஆம் ஆண்டு, ஏப்ரல் 25ஆம் நாள் பிறந்தார். ஆண்ட்ரூஸ் பல்கலைகழகத்தில் வேதாகம பட்டமும், அறிவியல் பட்டமும் பெற்றார். 1820ஆம் ஆண்டு ஸ்காட்லாந்தில் உயிர்மீட்சியும், மிஷனெரி பாரமும் பரவிய அந்நாட்களில் 23 வயது நிரம்பிய வா–பனாக கடல் கடந்து செல்லும் மிஷனெரி பணிக்காக **டப்** தன்னை அர்ப்பணித்தார். இவர்தான் ஸ்காட்லாந்து திருச்சபையின் கடல் கடந்து செல்லும் முதல் மிஷனெரியும் ஆவார். இந்தியாவில் உள்ள உயர்ஜாதி மக்களுக்கு சுவிசேஷத்தை வழங்கும் ஓர் புதிய திட்டத்துடன் வந்தார். இவர் இந்தியாவிற்கு வருமுன் செல்வந்தர்கள், உயர்குலமக்கள் சுவிசேஷத்தை கேட்பதற்கு குறைவான வாய்ப்புகளே இருந்தது.

பயணத்தின் போது ஏற்பட்ட கப்பற்சேதத்தில் தனது உடைமைகளை இழந்தும், மனம் சோர்ந்து போகாமல் பயணத்தைத் தொடர்ந்தார். 1830ஆம் ஆண்டு கல்கத்தாவில் அடிவைத்தார். செல்வந்தர்கள், உயர்வகுப்பினருக்கு சுவிசேஷத்தை அறிவிக்க முனைந்து செயல்பட்டார். தனது தரிசனமான மேற்கத்திய கலை அறிவியல் கல்வியுடன் வேதாகமத்தையும் சொல்–க் கொடுத்து, அதன் மூலம் மூட நம்பிக்கைகளை ஒழித்து, இயேசுவே இரட்சகர் என்பதை செயல்படுத்தினார். சில மாதங்களிலேயே ஆலமரத்தடியில் 5 மாணவர்களுடன் ஒரு ஆங்கிலப் பள்ளியை ஆரம்பித்தார். ஒரு வாரத்தில் 300 பேர் சேர்ந்துவிட்டனர். ஒரு கூட்ட உயர்குல வங்காள மொழி பேசும் இளைஞர்கள் ஆர்வம் காட்டினர். ஜெபத்துடன் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. வேதாகம பகுதி வாசித்து விளக்கம் கொடுக்கப்பட்டது. பாட திட்டத்தில் வேதாகமம் ஒரு பாடமாக இருந்தது. இத்திட்டத்தின் மூலம் கிறிஸ்துவை ஸ்திரமாக நிலை நாட்ட முடியும் என உறுதியாக நம்பி செயல்பட்டார். இந்த மிஷனெரி தரிசனத்தை அப்போது இருந்த மிஷனெரிகளும் கல்வி இயக்கங்களும் குறைகூற ஆரம்பித்தன. ஆனாலும் டப் உறுதியாக செயல்பட்டார். மூன்று வருடத்தில் 4பேர் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்றார்கள்.

பெண் கல்வி மறுக்கப்பட்ட அக்காலத்தில் உயர்குல பெண்களுக்காக தனிப்பள்ளி ஆரம்பித்தார். நன்கு படித்த உயர்குலத்தைச் சேர்ந்த 33 பேர் கிறிஸ்துவை ஏற்று, மிஷனெரிகளாகவும், போதகர்களாகவும் ஏற்படுத்தப்பட்டனர். இது **டப்** ஊழியத்தின் பெரிய வெற்றியாகும். கல்வியுடன் சுவிசேஷம் என்ற இவரது தரிசனத்திற்கு **வில்–யம் கேரியும், ராம்மோகன்ராயும்** ஆதரவளித்தனர். இவர்களது உதவியால், உடன்கட்டை ஏறுதல், குழந்தை திருமணம் போன்ற சமுதாய தீமைகள் மறைந்தது. உயர்குல மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டது. இத்தீமைகளை எதிர்க்க ஒரு கூட்ட மக்கள் எழும்பினார்கள்.

இந்த பள்ளியில் ஊழியமே வாழ்க்கையாக அமைத்துக் கொண்ட **டப்** தனது 4 பிள்ளைகளையும் தனது தேசத்தில் ஒரு கைம்பெண்ணிடம் விட்டு விட்டு வந்தார். அதில் கடைசி மகனை ஒரு வயது கூட நிரம்பாத குழந்தையாக விட்டு வந்த பின் 11 ஆண்டுகள் கழித்தே அவரது கடைசி மகனை சந்தித்தார். மிஷனெரி பணிக்காக தனது குடும்பத்தையே தியாகம் செய்தார். இங்கிலாந்து, அயர்லாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ் போன்ற நாடுகளில் பயணம் செய்து தனது ஊழியத்திற்காக ஜெப, பண உதவிகளைத் திரட்டினார். 10 ஆயிரம் பேருக்கு மேல் உதவி செய்ய முன் வந்தனர்.

இவர் சொற்பொழிவாற்றும் திறம்படைத்தவர்; அமெரிக்க தேசத்தின் காங்கிரஸ் சபையில் ஒரு முறை பிரசங்கித்துள்ளார். தனது ஊழிய அனுபவத்தை ஜனாதிபதியிடம் பகிர்ந்து கொண்டுள்ளார். 100க்கும் மேற்பட்ட வா–பர்கள் இவரால் மிஷனெரிகளாக உழைக்க முன் வந்தார்கள். இவருக்குப் பின் கல்வியும், மிஷனெரிப்பணியும் இணைந்து செயல்படுத்தும் முறை எங்கும் வந்தது. இதற்கு சாட்சியாக தமிழ் நாட்டிற்கு வந்த மிஷனெரிகள் ஆலயமும் பள்ளியும் நிறுவினார்கள். பள்ளிகள் மூலம் சிறுவயதிலேயே ஆண்டவரை அறிந்து அவரை ஏற்றுக்கொள்ளவும் வழி ஏற்பட்டது.

இவர் ஒரு வெற்றியுள்ள மிஷனெரியாகவும், வாக்குவன்மை நிறைந்தவராகவும் (Missionary Orator) விளங்கினார். நன்கு சொற்பொழிவாற்றும் திறன் படைத்தவர். செல்வந்தர்களும், உயர் குலத்தவரும் ஆண்டவரை ஏற்றுக்கொள்ள இவரது முறை மிகவும் உதவியாக இருந்தது.

## ஊழியத்தின் தேவைகளும் உங்கள் பங்கும்

- ❖ மாதந்தோறும் ரூ.1500/-கொடுத்து பீல் சுதேச ஊழியரை ஜெபித்து தாங்க முன் வரலாம்.
- ❖ ரூ.500/-மாதம் கொடுத்து ஊழிய சார்பு தேவைகள் சந்திக்கும்படி ஒரு கிராமத்தில் நடைபெறும் ஊழியத்தை தாங்கலாம்.
- ❖ ரூ.400/-மாதம் கொடுத்து ஆதிவாசி சிறுவர் ஒருவரை பராமரிக்க முன் வரலாம்.
- ❖ மூத்த சுதேச ஊழியர்களுக்கு ரூ.35,000/-மதிப்பில் இரு சக்கர வாகனம் **(Two Wheeler)**  வாங்கிக் கொடுக்க முன் வரலாம்
- ❖ பணித்தளத்தில் நடைபெறும் கூட்டங்கள், மூப்பர்கள் முகாம், சுதேச ஊழியர்கள் பயிற்சி ஆகியவற்றிற்கான செலவினைப் பொறுப்பெடுத்துக் கொள்ளலாம்.
- ❖ ரூ.70/-வீதம் குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழிகளில் வேதாகமங்கள் பீல் விசுவாசிகள் வாங்க உதவ முன்வரலாம்.
- ❖ அத்துடன் மறவாமல் பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.
- ❖ மாதந்தோறும் உங்களால் முடிந்த காணிக்கையை அனுப்புங்கள்.
- ❖ மற்றவர்களுக்கும் ஊழியத்தை அறிமுகப்படுத்துங்கள்.

இந்தப் பத்திரிக்கையை நீங்கள் இணையதளத்தின் மூலமாகவும் வாசித்து தேவனை மகிமைப்படுத்தலாம். மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு இமெயில் மூலமாகவும் அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

**http://www.shalommission.in/magazineview.asp**

## நாட்டு நடப்புச் செய்திகள்....

அமெரிக்காவில் 44வது அதிபரைத் தேர்ந்தெடுக்க நடத்தப்பட்ட தேர்த-ல் ஜனநாயக கட்சி வேட்பாளர் பராக் ஒபாமா அபார வெற்றி பெற்றுள்ளார். 2009ஆம் ஆண்டு ஜனவரி 20ம் தேதி இவர் பதவி ஏற்கிறார். வெள்ளை மாளிகை என்று அழைக்கப்படும் அதிபர் மாளிகையில் கறுப்பர் இனத்தைச் சேர்ந்த ஒருவர் குடியேறுவது அமெரிக்க வரலாற்றில் இதுவே முதல் முறையாகும்.

அரசு அதிகாரிகளின் ஊழல் பற்றி எஸ்.எம்.எஸ். மூலம் தகவல் திரட்டும் பணியை சி.பி.ஐ. மேற்கொண்டது. இந்த முயற்சி வெற்றி பெற்று இருப்பதாக சி.பி.ஐ. அதிகாரி தெரிவித்துள்ளார். லஞ்சத்தை ஒழிக்க சி.பி.ஐ.யில் தனிப்பிரிவு உள்ளது. இந்த எஸ்.எம்.எஸ் புகாரின் பேரில் இவரை 40பேர் சிக்கி உள்ளனர். இந்த எஸ்.எம்.எஸ். பிரசாரம் நல்ல பலனை தந்துள்ளது. என சி.பி.ஐ. பத்திரிக்கை தொடர்பு அலுவலர் ஆர்.கே. கவுர் கூறியுள்ளார்.

ஆஸ்திரே-ய அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் 2 0 என்ற கணக்கில் "பார்டர் கவாஸ்கர்" டிராபியை இந்திய கிரிக்கெட் அணி கைப்பற்றியது. 4 போட்டிகள் கொண்ட இந்த தொடரில் நாக்பூரில் நடந்த கடைசி டெஸ்டில் 172 ரன் வித்தியாசத்தில் இந்தியா வென்றது. கேப்டனாக பொறுப்பேற்ற டோனி முதல் முறையாக டெஸ்ட் தொடரை கைப்பற்றி அசத்தியுள்ளார்.

சென்னை துறைமுகத்தில் கப்பல் வழியாக மலேசியாவுக்கு 17.11.2008 அன்று கடத்தப்படவிருந்த ரூ. 20 கோடி மதிப்புள்ள 197 கிலோ "கேட்டமைன்" என்ற போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இந்த போதைப்பொருளை வெங்காயக் கூடைக்குள் மறைத்துவைத்து எடுத்துச் செல்ல முயற்சி செய்தனர். ரூ. 20 கோடி மதிப்புள்ள போதைப்பொருள் பிடிபட்டது இதுவே முதல் முறையாகும்.

– நன்றி தினகரன்

### எங்களுடன் தொடர்பு கொள்ள


<u>தலைமை அலுவலகம்</u>

**Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.`

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

<u>பணித்தள அலுவலகம்</u>

Bro. V. Devadoss
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

email : info@shalommission.in
Website : www.shalommission.in

# சுதேச ஊழியர் குடும்ப முகாமிற்குப் பின் பணித்தளத்தில் நடந்த அற்புத சாட்சி

மத்தியப்பிரதேசம் மாநிலத்தில், ரிங்கோல் கிராமத்தைச் சேர்ந்த சுதேச ஊழியர் நவல்சிங் மாவி –யாகிய நான் எங்கள் குடும்பத்துடன் ஆத்தும பாரத்துடன் ஷாலோம் சுதேச ஊழியர்கள் குடும்ப முகாம் 2008ல் கலந்து கொண்டோம். தேவன் எங்களை ஆத்தும பாரத்தினாலும், புதிய அபிஷேகத்தாலும் நிரப்பினார். குறிப்பாக 06.11.2008 அன்று மாலை சந்தியா கூட்டத்தில் சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள் மன்றாட்டு ஜெபத்தை ஏறெடுப்பது பற்றி வசனத்தைப் பிரசங்கிக்கும்போது என் சொந்த பீல் ஜனங்களுக்காக, என் சொந்த கிராமம் ரிங்கோலுக்காக கண்ணீர் சிந்தி ஏங்கி ஜெபித்தோம். தேவன் புது கிருபையை வல்லமையாக ஊற்றினார்.


நாக்கில் அற்புத சுகம் பெற்ற பின்பு

முகாம் முடிந்து 08.11.2008 அன்று ரிங்கோல் கிராமத்திற்கு வந்தபோது அன்சிங் நாத்தியா மாவி (என்னுடைய பெரியப்பா, மந்திர பூஜைகள் செய்பவர்) என்பவர் குடும்பமாக ஆலயத்தில் எங்களுக்காக காத்துக் கொண்டிருந்தார்கள். அன்சிங் "கேன்சர்" நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் இருந்து முடியாத நிலையில், மருத்துவர்கள் கைவிட்ட நிலையில் மரணத்தை எதிர்பார்த்து தங்கள் கிராமத்திற்கு வந்தார்கள். நாக்கில் வந்த கேன்சர் நிமித்தமாக சாப்பிட முடியாமல், கோழை வடித்துக் கொண்டு பேசமுடியாமல் கைகளால் பேசினார். எங்களை ஜெபிக்கக் கேட்டுக் கொண்டார். ஆலயத்தில் நாங்கள் குடும்பமாக அன்சிங்கிற்காக ஜெபித்த போது தெய்வீக பிரகாசம் இறங்கிவந்ததை என் மனைவி சாந்தாபேன் கண்டார்கள். ஜெபித்தபின் அவர்கள் வீட்டிற்குச் சென்று விட்டார்கள்.

மறுநாள் 09.11.2008 ஞாயிறு காலையில் அந்த குடும்பத்தார் அனைவரும் என் வீட்டிற்கு வந்து ஆச்சரியமாக சாட்சி கொடுத்தார்கள். கோழை வடிந்தது நின்றுவிட்டது, நாக்கு வலி, தலையில் உள்ள வீக்கம் வலி எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. பேசமுடியாமல் நேற்று நின்றார். இன்று பேசினார். கஞ்சி சாப்பிட ஆரம்பித்தார். பல இரவுகளுக்குப் பின் நேற்று நன்றாக தூங்கினோம் என்றார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! இந்த சாட்சியை கேட்டு கிராமத்தில் ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த புறஜாதிகள், மந்திரவாதி குடும்பத்தார் தங்கள் குடும்பத்தின் விடுதலைக்காக ஜெபிக்க அன்று மாலையில் வந்து விட்டார்கள். "இயேசுவே தேவன்" என்று அறிக்கையிட்டார்கள். தேவன் எங்கள் ஜெபத்தைக் கேட்டு எங்கள் கிராமத்தை முழுவதும் இரட்சிக்க ஆரம்பித்துவிட்டார். முழு கிராமமும் இரட்சிக்கப்படும் என்று விசுவாசத்துடன் தேவனை துதித்தோம். அல்லேலூயா!




அன்சிங் நாத்தியா மாவிக்காக ஜெபித்த சுதேச ஊழியர் நவல்சிங் மாவி

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN-07/2006-2008
Postal at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month




Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss